**04.02.2026.**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.205/2018</u>

அ.சா.**39**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.டாக்டர். செல்வகுமார் | | |
| த/பெ | பி.ராஜீ | | |
| கிராமம் | கீழ்ப்பாக்கம் | தொழில் | ஓய்வு பெற்ற மருத்துவக் கல்லூரி பேராசிரியர். |
| தாலுக்கா | சென்னை | வயது | 63/2026 |
| மாவட்டம் | சென்னை | தேதி | 04.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பேராசிரியராக பணிபுரிந்து, கடந்த 2022ம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது ஸ்ரீ பாலாஜி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், குரோம்பேட்டை சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10/02/2016ம் தேதி அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

பணியில் இருந்த போது, சிபிசிஐடி விழுப்புரம் ஆய்வாளர் அவர்கள் என்னை அணுகி, சான்றிதழை கொடுத்து, 5 கேள்விகளை கேட்டார்.

<u>அவர் என்னிடம் சமர்ப்பித்த ஆவணங்கள்:</u>

1.பிரேத பரிசோதனை அறிக்கை,

2.உள்ளுறுப்புகளை ஆராய்ந்து தடய அறிவியல் துறை அளித்த அறிக்கை,

3.திசு பரிசோதனை நுண்ணோக்கி மூலம் அளிக்கப்பட்ட திசு பரிசோதனை,

4.பிரேத பரிசோதனை செய்த மருத்துவரின் இறுதி கருத்து,

ஆகியவற்றை படித்துப் பார்த்து, அவர் எழுப்பிய கேள்விகளுக்கு வரிசை கிரமமாக கீழ்கண்டவாறு பதில் அளித்தேன்.

<u>பதில்கள் :-</u>

1) இறந்தவரின் உடலின் மீது காணப்பட்ட கன்றிய காயங்களினால், இறப்பு ஏற்படுத்தக்கூடும்.

2) கன்றிய காயங்கள் மழுங்கிய ஆயுதங்களாலோ, மழுங்கிய பொருட்களாலோ, அல்லது மழுங்கிய பரப்புகளாலோ, ஏற்படக்கூடும்.

3) தண்டவாளம் போன்ற இரு கோடுகள் போன்ற கன்றிய காயங்கள் இரும்பு கம்பிகள் அல்லது பைப்புகள் அல்லது தடி, போன்ற ஆயுதங்களால் ஏற்படக்கூடும்.

4) இரண்டு உள்ளங்கையிலும், இரண்டு உள்ளங்கால்களிலும், காணப்படும் கன்றிய காயங்கள் மழுங்கிய ஆயுதங்களாலும், அல்லது மழுங்கிய பொருட்களாலோ,

ஏற்படக்கூடும். உள்ளங்கையிலும், உள்ளங்காலிலும் காணப்படும் கன்றிய காயங்கள் தானாகவோ, அல்லது விபத்துகளிலோ, ஏற்பட வாய்ப்பு இல்லை.

5) இறந்தவர் பிரேத பரிசோதனைக்கு 24 மணி நேரம் முதல் 36 மணி நேரத்திற்குள் இறந்திருக்கலாம்

என்று நான் பதில் வழங்கினேன். நான் வழங்கிய பதில் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த ஆவணம் அ.சா.ஆ.35 ஆகும். இது சம்பந்தமாக அன்று என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

<u>**1**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **:-**</u>

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் கருத்துரை வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். சாதாரணமாக பிரேத பரிசோதனை செய்யும் சமயத்தில் பார்க்கும்போதுதான் காயங்களின் உண்மை நிலை தெரியவரும் என்றால் சரிதான். ஒரு நபரை கும்பல் துரத்தும்போது அவர் ரயில்வே தண்டவாளத்தில் தவறி விழும்போது, அவரது உடலில் கன்றிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால், உடலின் மற்ற இடங்களில் கன்றிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் உள்ளங்கையிலும் உள்ளங்கால்களிலும் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. ரயில்வே தண்டவாளத்தில் நிலை தடுமாறி கீழே விழும்போது, வேகமாக விழுந்து அங்கு கையை வைக்கும் போது, கன்றிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால், உள்ளங்கையில் கன்றிய காயம் வரலாம். ஆனால் உள்ளங்கால்களில் ஏற்பட வாய்ப்பில்லை. உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும், தடி போன்ற ஆயுதங்களால் தாக்கிய அறிகுறி இருந்ததற்கான ஆவணங்கள் எதையும் என் வசம் காட்டவில்லை என்றால், சரிதான். தற்போது என் வசம் பிரேத பரிசோதனை அறிக்கை இல்லை அதை பார்த்தால் உறுதியாக சொல்வேன்.

**<u>2,4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

பொதுவாக மழுங்கிய ஆயுதங்கள் லேசாக தாக்கினால் கன்றிய காயங்களும், வேகமாக தாக்கினால் கிழிந்த காயங்களும் ஏற்படும் என்றால் சரிதான். அது எந்த இடத்தை தாக்குகிறதோ அதை பொறுத்து காயங்கள் மாறுபடும். அந்தப் பிரேத பரிசோதனை அறிக்கையில் எந்த இடத்திலுமே, அந்த காயங்கள் கொடுங்காயங்களா? அல்லது சாதாரண காயங்களா? என்று குறிப்பிடப்படவில்லை என்றால், உயிரோடு இருப்பவர்களுக்கு மட்டும்தான் கொடுங்காயங்கள் மற்றும் சாதாரண காயங்கள் என்று குறிப்பிட முடியும். இறந்து போனவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால் அதை குறிப்பிட மாட்டோமா என்றால், அந்த காயம் மரணத்தை ஏற்படுத்தும் அளவிற்கு கடுமையானதா? இல்லையா? என்பதை பற்றி மட்டுமே சொல்லுவோம். இந்த பிரேத பரிசோதனை அறிக்கையில் காணப்பட்டுள்ள காயங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் ஏற்பட்டவையா அல்லது வேறு வேறு நேரங்களில் ஏற்பட்டவையா என்று என்னால் அறுதியிட்டு சொல்ல முடியாது. 24 மணி நேரத்திற்குள் ஏற்படுத்தப்பட்டவை என்று வேண்டுமானால் சொல்லலாம். பிரேத பரிசோதனையின்படி உடலில் ஏற்பட்டுள்ள கன்றிய காயங்கள் அனைத்தும் மழுங்கிய ஆயுதங்களால் வேகமாக தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்கள் அல்ல, லேசாக தாக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கலாம் என்று சொன்னால் அப்படி கூற முடியாது. உடலில் பல்வேறு இடங்களில் கன்றிய காயங்கள் இருப்பதால், முக்கியமாக உள்ளங்கையிலும், உள்ளங்கால்களிலும் இருப்பதால், அது விசையுடன் ஏற்பட்டதாகவும் இருந்திருக்க கூடும். நான் சொல்வது தவறு என்றும், வேகமாக அடித்திருந்தால் கிழிந்த காயங்கள் தான் ஏற்பட்டிருக்கும் என்றும், இந்த அறிக்கையில் கண்டுள்ளது போல கன்றிய காயங்கள் ஏற்பட வாய்ப்பல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றால், பயன்படும் ஆயுதம் எது என்பதும், அது பயன்படுத்தப்பட்ட உடலின் பகுதி எதுவோ அதை வைத்து காயங்களின் தன்மை மாறுபடும். தசையுள்ள பகுதிகளில்

தாக்கினால் கன்றிய காயங்கள் தான் வரும். புறங்கை மற்றும் புறங்கால் ஆகிய பகுதிகளில் மழுங்கிய ஆயுதம் தாக்கும் போது, கிழிந்த காயம் தான் ஏற்படும் என்றால், சரிதான். தாக்கப்படுவதை பொறுத்து மாறுபடும். தலையில் காயங்கள் உள்ளதா என்றால், தலையின் தோலின் அடியில் கன்றிய காயங்கள் உள்ளது. தலையில் காயம் பட்ட பகுதி முடி உள்ள பகுதியா ? இல்லையா? என்று தற்போது என்னால் கூற முடியாது. மூளையின் பரப்பு எங்கும் தோலுக்கு அடியில் ரத்தக் கசிவு காணப்பட்டது. தலையின் வெளிப்புறத்தில் எந்த இடத்திலும் ரத்த காயங்கள் இல்லை. தலை தோலுக்கு அடியில் இருந்தது. தலையில் வெளிப்புறத்தில் வலது பக்கத்தில், தலை தோலின் அடிப்பகுதியில் கன்றிய காயங்கள் இருந்தது. பிரேத பரிசோதனை அறிக்கையில் காயங்களின் நிறங்கள் குறித்து குறிப்பிட்டுள்ளார்களா என்றால் குறிப்பிட்டுள்ளார்கள். பிரேத பரிசோதனை அறிக்கையின்படி அனைத்து சிராய்ப்பு காயங்களும் சிவப்பு நிறமாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். அனைத்து கன்றிய காயங்களும் ஊதா நிறத்தில் இருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கை குறிப்பிடுகிறது. சிராய்ப்பு காயங்கள் பொதுவாக கடினமான பரப்புகளால், அல்லது ஆயுதங்களால் தான் ஏற்பட வாய்ப்புள்ளதே தவிர, மழுங்கிய ஆயுதங்களால், பரப்புகளால் ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னால், சிராய்ப்பு காயங்கள் உராய்ந்தாலோ, அழுத்தத்தினாலோ ஏற்படக்கூடிய காயங்களாகும். தடி, பைப் போன்ற ஆயுதங்கள் சிராய்ப்பு காயங்களை ஏற்படுத்தாது என்று சொன்னால் அந்த ஆயுதங்களை வைத்து தொடர்ச்சியாக ஒரே இடத்தில் அடிக்கும் போது சிராய்ப்பு காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சொரசொரப்பான ஆயுதங்கள் தான் சிராய்ப்பு காயங்களை ஏற்படுத்தும் என்றும், வழுவழுப்பான ஆயுதங்கள் சிராய்ப்பு காயத்தை ஏற்படுத்தாது என்றும் சொன்னால், சரிதான். ஆனால் மழுங்கிய பொருட்களாலும் ஒரே இடத்தில் பலமுறை காயப்படுத்தினால் ஏற்பட வாய்ப்புள்ளது. பலமுறை பயன்படுத்தினால் கிழிந்த காயங்கள் தான் ஏற்படும் என்று சொன்னால், அது விசையை பொருத்தது.

காயங்கள் அனைத்தும் வெளிப்புற காயங்களுக்கு ஏதுவாக ஒத்து இருந்ததா? என்று என்னால் சொல்ல முடியாது என்றால், அவ்வாறு பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை அதனால் என்னால் கூற இயலாது. காயங்களில் ரத்தக்கசிவு இருப்பதாக சான்றிதழிலோ, ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லை என்றால், கன்றிய காயங்கள் ரத்த கசிவு உள்ள காயங்கள் தான். மற்ற காயங்களில் ரத்தக்கசிவு இல்லை. நான் சொல்வது போல இரத்த கசிவு இருந்திருந்தால் அது கிழிந்தகாயமாக மாறி இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. கன்றிய காயங்கள் என்றால், மழுங்கிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு திசுக்கள் சேதம் ஏற்பட்டு இரத்த கசிவு ஏற்படும் காயங்களாகும். எனவே ரத்தக் கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது.

<u>**3** ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:-**</u>

<u>இல்லையென தெரிவிக்கப்பட்டது**.**</u>

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>

Taken down before me in open court, the witness is examined at a distance point at thambaram with the help of system officer (nodal officer) through Microsoft teams app and deposition sent to the witness through Email read over and interpreted to the witness and acknowledged by him to be correct.